அடைக்கல அன்னை சபைத் தலைமையகம்,

அரண்வாயல் குப்பம்,

திருவள்ளூர் மாவட்டம் - 602 025

சுற்று மடல் எண் : 75 நாள் : 02.02.2021

**என் பாசத்திற்குரிய அருட்சகோதரிகளே!**

**நெஞ்சம் நிறைந்து அன்போடு உங்களை வாழ்த்துகிறேன்.**

பல்வேறு காலநிலை மாற்றங்கள், சூழலியல் மாறுபாடுகள்,

உளவியல் பண்பாட்டு ரீதியான முரண்பாடுகள் சூழ்ந்த

காலக்கட்டத்தை நாம் இப்போது சந்திக்கிறோம்.

ஆனால் அவற்றை எதிர்கொள்ளும் பக்குவத்தை

நாம் இன்னும் வளர்த்துக் கொள்ளாமல் இருப்பது கவலை தருகிறது.

**நமது திருத்தந்தை பிரான்சிஸ் சமூக ஓட்டத்தைத் துல்லியமாக உணர்ந்து**

**அதற்கான சரியான பதிலைத் தேர்வு செய்து தருகிறார்.**

அதன்படி 2022 ஆம் ஆண்டுக்கான பொதுச்சங்கம் (**SYNOD**) க்கான மையக்

கருத்தாக **'SYNODALITY'** யைத் தேர்வு செய்துள்ளார்.

**SYNODALITY என்றால் 'WALKING TOGETHER' என்று பொருள்.**

ஆம்! அதையே திருத்தந்தை வலியுறுத்துகிறார்.

**A SYNOD**

is a meeting of bishops gathered

to discuss a topic of theological or pastoral significance,

in order to prepare a document of advice or counsel to the pope.

**In October 2022,**

bishops from around the world will meet in Rome

to discuss the theme:

**"For a synodal Church: communion, participation and mission."**

“**Synodality is a style, it is a walk together,**

**and it is what the Lord expects from**

**the Church of the third millennium,”**

Pope Francis said Nov. 29.

இன்றைய நம் சமூகம் கண்மூடித்தனமான போட்டியில் அலைக்கழிக்கப்படுகிறது.

ஒருவரை ஒருவர் முந்திக்கொள்கின்ற இந்தப் போட்டியில்

கிடைக்கும் வெற்றியும் பொறாமையால் சூழப்பட்டு

மகிழ்ச்சியாய் அனுபவிக்க இயலாமல் போகிறது.

நமது அறிவுதெளிவற்ற ஓட்டத்தில்

எத்தனை பேரை இடித்துத் தள்ளிவிட்டோம்

என்ற விழிப்புணர்வு நமக்கில்லை.

காரணம், ஓட்டத்தில் வெற்றி பெறுவதைத் தவிர நம் கண்முன் எதுவுமில்லை.

இதனால்தான் வெற்றியும் நமக்கு மகிழ்ச்சியைத் தருவதில்லை.

ஏனென்றால் அவை மனசாட்சியோடு

எல்லோரின் ஒத்துழைப்போடு பெறப்பட்ட வெற்றியல்ல.

பலரைக் காயப்படுத்தி, சிலரை விழத்தாட்டி,

ஏராளமான பேரை அலட்சியப்படுத்திப் பெறப்பட்ட வெற்றி.

இது மகிழ்ச்சியை ஏற்படுத்துவதை விட வருத்தங்களையே கொண்டு வரும்.

முகத்திற்கு நேர் பாராட்டுவதுபோல் பாவனை செய்தாலும்

முதுகுக்குப் பின்னால் நம் வீழ்ச்சிக்கான பள்ளமாக அது அமைந்து விடுகிறது.

அப்படியானால் வெற்றி பெற உழைப்பது தவறா? என்று கேட்கலாம்.

தவறல்ல; இங்குதான் திருத்தந்தை வலியுறுத்தும்

‘இணைந்து நடப்போம்’ கைகொடுக்கிறது.

வெற்றியை நோக்கித் தனி ஆளாக அல்ல இணைந்த கரங்களோடு நடப்போம்.

வெற்றி பெறுவதும், நாம் தனிப்பட்ட ஆளாய் அல்ல இணைந்த குழுவாய்

இணைந்த குழுமமாய், இணைந்த இல்லமாய், இணைந்த நிறுவனமாய் வெற்றி பெறுவோம்.

அப்படியானால் போட்டியில்லாத வெற்றியை

பொறாமை வரவழைக்காத பரிசை

முகத்துதி இல்லாத பாராட்டை

நெஞ்சம் நிறைந்த வாழ்த்தை

நம்மால் அனுபவிக்க இயலும்.

அதுவே நம்மையும் நம்மோடுள்ள அனைவரையும் மகிழ்ச்சியும் நிறைவும் கொள்ளச் செய்யும்.

**இணைந்து வழிநடக்க**

**நமக்கு விசாலமான இதயம் வேண்டும்.**

**முந்தி ஓட நினைப்பவரை ஒரு கரத்திலும் நடக்க இயலாதவர்களை மற்றொரு**

**கரத்திலும் இணைத்துக் கொண்டு தடம்பிறழாமல் நடக்கும் பக்குவம் வேண்டும்.**

**இந்தப் பக்குவம் வளர ஆன்மீகப் பயிற்சி வேண்டும்.**

**அனைவர் மீதும் கரிசனை வேண்டும். கடவுளைக் கண்முன் கொள்ள வேண்டும்.**

**ஓடும் மூத்த பிள்ளையை ஒரு கையில் பிடித்துக்கொண்டு நடக்க இயலா**

**சின்னப்பிள்ளையை இடுப்போடு சேர்த்து அணைத்துக் கொண்டு**

**நடந்து செல்லும் தாயின் பரிவு வேண்டும்.**

**மொத்தத்தில் நம்மில் ஆன்மீகத் தாய்மை மேலோங்க வேண்டும்.**

**அது எழுத்தளவில் அல்ல உயிராய் நம்மில் பரிமளிக்க வேண்டும்.**

**கரங்களை இணைத்து வழிநடக்க**

மற்றவர்கள் நம்மைவிட மதிப்புக்கு உரியவர் என எண்ண வேண்டும்.

நம்மோடு வாழும் அனைவரும் சமமானவர்கள் என்ற புரிதல் வேண்டும்.

அடுத்தவர் மீது நம்பிக்கை வேண்டும்.

எலலோரையும் நேசிக்க இதயம் திறக்க வேண்டும்.

இதனைப் புரிந்து கொண்டால்

வாழ்வு சுகப்படும்; வசந்தம் வசப்படும்.

இன்றையச் சூழலில் சுமூகமான வாழ்வு சாத்தியமாக இணைந்து வழிநடப்போம்.

**சகோதரிகளின் கனிவான கவனத்திற்கு:**

- ♣ நமது மாமண்டூர் செப இல்லத்தில் தனியாகவும் குழுவாகவும் தங்கி செபிக்க, தியானம் செய்ய, தனித்திருக்க **அறை வசதிகளை மேலும் ஏற்படுத்தி புனிதம் செய்திருக்கின்றோம்**. எனவே குழுவாகவும் தனியாகவும் தியானம் செய்ய விரும்பும் சகோதரிகள் மாமண்டூர் செப இல்லத்தைத் தெரிவு செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

- ♣ வலைதளத்தில் முக்கிய செய்திகளை அறிவிக்க ஒரு **WHATSAPP** குழுவை ஏற்படுத்தும் போதெல்லாம் ஏதாவது அவசியமற்ற செய்திகளைப் பதியவிட்டு குழுவின் நோக்கத்தை சிதைத்து விடுகிறீர்கள். எனவே **MEGA CHRISTMAS குழுவைக் கலைக்கிறோம்.**

- ♣ புதிய குழு ஒன்றை **GENERLATE** இல் இருந்து உருவாக்குகிறோம். **அது தலைமையகத்தின் செய்திகளை அறிவிக்க மட்டுமே. யாரும் எந்த பதிலையும் பதிவிட வேண்டாம்.**

- ♣ தனிப்பட்ட குழுக்கள் / சகோதரிகள் யாருமே உங்கள் **WHATSAPP** மற்றும் பிற **MEDIA APPS** – க்கு சபையின் பெயரைப் பயன்படுத்தக் கூடாது. தயவு செய்து புரிந்து கொள்ளுங்கள். உங்கள் குழுவிற்கு வேறு ஏதாவது பெயர் கொடுக்க வேண்டுமேயன்றி சபையின் பெயரைப் பயன்படுத்தக் கூடாது.

- ♣ **தனிப்பட்ட முறையில் சபை சார்பாக நடத்தப்படும் நிகழ்வுகள், உரைகள், ஆகியவற்றை ஒருபோதும் வெளியாருக்கு அனுப்பவே கூடாது. சபை உறுப்பினர் அல்லாத அனைவரும் குருக்கள் உட்பட வெளியார்தான் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். உங்களின் பொறுப்பற்ற பகிர்வுகளால் சபை சிக்கல்களை சந்திக்கிறது.**

## ***சபைத் தலைமை அன்னையின் பிப்ரவரி மாதப் பணித்திட்டம்***

| | | |
|---|---|---|
| 01 | - | தலைமையகம் |
| 02 | - | மாமண்டூர் இல்லம் மந்திரிப்பு, தலைமையகக் குழும விழா கொண்டாட்டம் |
| 03 | - | MEETING WITH ARCH BISHOP OF MADRAS - MYLAPORE |
| 04 | - | ஆத்துக்குடி இல்லப்பார்வை |
| 05 | - | கருங்கண்ணி இல்லப்பார்வை |
| 06 | - | பொய்கைநல்லூர் இல்லப்பார்வை |
| 07 | - | பாலத்தடி இல்லப்பார்வை |
| 08 | - | பெரும்பண்ணையூர் இல்லப்பார்வை |
| 09 | - | வேங்கிடாக்குளம் இல்லப்பார்வை |

| | | |
|---|---|---|
| 10 - 11 | - | NAAC PREPARATORY MEET |
| 12 | - | INAUGURATION OF KURUNGADUGAL (குறுங்காடுகள்)<br>Bon Secours College, Vilar<br>15th Year Sisters' Meeting |
| 13 | - | பட்டுக்கோட்டை CBSE இல்லப்பார்வை |
| 14 | - | தனி செப நாள் |
| 15 – 16 | - | திருத்துறைப்பூண்டி இல்லப்பார்வை |
| 17 | - | வேளை நகர் மருத்துவமனை இல்லப்பார்வை |
| 18 | - | தேவதானம் இல்லப்பார்வை |
| 19 | - | நாகப்பட்டிணம் இல்லப்பார்வை |
| 20 – 22 | - | வேளாங்கண்ணி இல்லப்பார்வை |
| 23 | - | திருவாரூர் CBSE இல்லப்பார்வை |
| 24 | - | சீர்காழி இல்லப்பார்வை |
| 25 | - | CLASS FOR SILVER JUBILEE SISTERS - MAMANDUR |
| 26 | - | NADU STREET BLESSING |
| 27 – 28 | - | அலுவலகப்பணிகள் - தலைமையகம் |

**இணைந்து வழி நடக்கக் கற்றுக் கொள்வோம்!**

**இசைவான இணக்கமான வாழ்வைப் பெற்றுக் கொள்வோம்!!**

**அக ஒளிப்பயணத்தில் தோழமையுடன்**

Sr. Maria Philomi FBS

**சபைத் தலைமை அன்னை**